ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் திண்டுக்கல்லில் நடைபெற்ற சமத்துவ நாள் விழாவில் அமைச்சர்கள் இ.பெரியசாமி, அர. சக்கரபாணி ஆகியோர் கலந்துகொண்டு, 998 பயனாளிகளுக்கு ரூ.3.51 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன், நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் ஆகியோர் உள்ளனர்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், நேரு, பாண்டியன், அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், தனச்செல்வம், சசிகுமார், கௌரிசங்கர், எஸ்.வி.சுதன், காவேரி ஆதிசங்கர் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்டம் – சிவகாசி வட்டம் – காரிசேரியில் மின்சாரம் தாக்கி

உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப். 16 -

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காரிசேரி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்ப த்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளது டன் நிதியுதவி வழங்கியும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், காரிசேரி கிராமம், வடக்குத் தெருவில் அமைந்துள்ள மாரியம்மன் கோவில் பொங்கல் மறுபூஜைக்காக நேற்று முன்தினம் (14.4.2025) மாலை சுமார் 3.10 மணியளவில் ரேடியோ அமைக்கும் பணியின்போது அருகில் உள்ள டிரான்ஸ்பார்மர் வயரின் மீது மின்சார வயர் பட்டதில் ரேடியோ அமைக்கும் பணியை மேற்கொண்ட காரிசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.திருப்பதி (வயது 27) த/பெ.ராமர் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும், மேற்படி சம்பவம் இறந்த திரு.திருப்பதி அவர்களின் வீட்டிற்கு அருகில் நிகழ்ந்ததால் அவருடைய மனைவி திருமதி.லலிதா (வயது 25) மற்றும் பாட்டி திருமதி.பாக்கியம் (வயது 75) ஆகியோர் திரு.திருப்பதி என்பவரை காப்பாற்ற முயன்றபோது மேற்படி இருவர் மீதும் மின்சாரம் பாய்ந்ததில் அவர்களும் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ரிஷிவந்தியம் தொகுதியில் ரூ.38.75 கோடியில்

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடு கட்ட பணி ஆணை!

வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, ஏப். 16 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மூலம் கலைஞரின் கனவு இல்ல பணி ஆணை வழங்கும் விழா வாணாபுரம் பகண்டை கூட்டு சாலையில் உள்ள சட்டமன்ற அலுவலகம் மற்றும் சந்தப்பேட்டை தனியார் திருமண மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்றது, இவ்விழாவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஒரு பயனாளிக்கு தலா ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் 60 ஊராட்சிகளில் உள்ள 1,120 பயனாளிகளுக்கு ரூ.38.75 கோடி மதிப்பில் கலைஞர் கனவு இல்லம் கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கினார், தொடர்ந்து அவர் பேசுகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, அமைச்சர் எ.வ.வேலு உத்தரவின் பேரில் மாவட்ட முழுவதும் கலைஞர் கனவு இல்லம் வீடு கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு வருகிறது, அதன் பேரில் ரிஷிவந்தியம் தொகுதியில் உள்ள 60 ஊராட்சிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது, மீதமுள்ள ஊராட்சிகளுக்கும் அடுத்த வாரம் அவர்களுக்கு பணியானை வழங்கப்பட உள்ளது, வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மதிப்பு ரூ.38.75 கோடியாகும், வீடுகள் தகுதி வாய்ந்த பயனாளிகளை பார்த்து தான் கொடுக்க வேண்டும் என்ற அளவுக்கு வழிவகை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டத்தை வடிவமைத்துள்ளார், இதில் வேண்டியவர், வேண்டாதவர்கள் என பாகுபாடு இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது, கடந்தாண்டு சேர்த்து சராசரியாக ஒரு ஊராட்சிக்கு 30 வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளது, இது வரலாற்றில் மிகப்பெரிய சாதனைகள் தான், கடந்த ஆட்சி காலத்தில் தலைவர்கள் உறவினர்களுக்கு மட்டுமே வீடுகள் கொடுத்துள்ளார்கள், ஆனால் தற்போது அனைவருக்கும் வீடுகள் வழங்கப்படுகிறது, கலைஞரின் கனவு இல்ல பணி ஆணைகளை பெற்ற பயனாளிகள் ஒரு வார காலத்துக்குள் பணிகளை தொடங்க வேண்டும், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் பயனாளிகளுக்கு அழுத்தமும் தரக்கூடாது, முடிந்தவரை பயனாளிகளுக்கு உதவி செய்யுங்கள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் இவ்வாறு பேசினார்.

இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் ராஜேந்திரன், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, பெருமாள், துரைமுருகன், பாரதிதாசன், ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் அஞ்சலாட்சி அரசகுமார், வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், துணைத் தலைவர்கள் தனம் சக்திவேல், சென்னம்மாள் அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் ஜெய்சங்கர், கோவிந்தராஜன், அமிர்தம் ராஜேந்திரன், ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கணேசன், ராஜு, இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜீவ் காந்தி, உதயா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மேலாளர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

அம்பேத்கர் பிறந்த நாள் விழா - சமத்துவ நாள் உறுதிமொழி!

திருவுருவப் படத்திற்கு மலர்தூவி செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மரியாதை!

செஞ்சி , ஏப். 16 -

சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாள் விழா நேற்று முன்தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் டாக்டர் அம்பேத்கரின் பிறந்தநாள் விழா செஞ்சி பேருந்து நிலையம்,மற்றும் செஞ்சி கூட்டு சாலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செஞ்சி கூட்ரோட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழியை தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய துணை செயலாளர் செல்வமணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மோகன், நூர்ஜகான், ஜாபர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் வார்டு செயலாளர் ஜி.டி.தனசேகரன், நிர்வாகிகள் சம்பத்குமார், ராம்குமார், சந்திரன், தொண்டரணி பாஷா, ஜாபர், மகாதேவன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டியூரில் முன்னாள் அமைப்பு செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசுவின் 34வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் ராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார். உடன் தென்னரசு மகள் இளவரசி மருமகன் நமகோடிநாராயணன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் கார்த்தி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பச்சைப் பொய்யைச் சொல்கிறார்! ஒன்றிய அமைச்சர்

அமித்ஷா - அம்பேத்கரை விமர்சித்தபோது ஆளுநர் எங்கே போனார்?

உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் கேள்வி!

சென்னை, ஏப். 16 -

ஆளுநர் ஆர்.என்.ரவி பச்சை பொய்யைச் சொல்கிறார் என்றும் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அம்பேத்கரை விமர்சித்தபோது ஆளுநர் எங்கே போனார் என்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் அறிக்கையில் கேள்வி கேட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சர் கோவி.செழியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களை எல்லாம் பல மாதங்களாகக் கிடப்பில் போட்ட ஆளுநருக்கு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இந்தியா முழுவதும் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஜனாதிபதிக்கும் 3 மாதம் காலக்கெடு நிர்ணயித்து உத்தரவிட்டிருக்கிறது உச்ச நீதிமன்றம்.

இந்த வடுக்களை எல்லாம் தாங்கிக் கொள்ள முடியாமல், வழக்கு போட்டு வென்ற தமிழக அரசுக்கு எதிராக வழக்கம் போல ஓலமிட்டிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. அம்பேத்கரின் பிறந்தநாள் விழாவில் பேசிய ஆளுநர் ரவி, அபத்தமான கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்.

பச்சை பொய்யைச் சொல்லும் ஆளுநர்!

"சமூக நீதி குறித்துப் பேசும் இந்த மாநிலத்தில் செருப்பு போட்டுச் செல்வதற்காகவும், இரு சக்கர வாகனத்திற்காகவும் தலித்துகள் தாக்கப்படுகின்றனர்" என பச்சை பொய்யை சொல்லியிருக்கிறார் ஆளுநர். 'பட்டியல் சாதியினருக்கு எதிரான குற்றங்களில் பீகார் இரண்டாவது இடத்தில் இருக்கிறது' எனத் தேசியப் பட்டியல் சாதியினருக்கான ஆணையத்தின் (NCSC) தலைவர் விஜய் சாம்ப்லா 2023ல் சொன்னார். ஆளுநர் அவர்களே உங்கள் சொந்த மாநிலத்தில் இப்படி அநீதி நடந்து கொண்டிருக்கும் போது தமிழ்நாட்டைப் பற்றிப் பேச உங்களுக்குத் தகுதி இருக்கிறதா? பீகாரில் பாஜக தயவில்தான் ஆட்சி நடக்கிறது. அதைக் கண்டித்துப் பேச முடியுமா உங்களால்!

அம்பேத்கரை பற்றியெல்லாம் உருகிப் பேசியிருக்கிறீர்கள். "அனைவரும் ஒன்று, அனைவரும் சமம் என்பதைத்தான் சனாதன தர்மம் கூறுகிறது" என சனாதனத்திற்கு பிராண்ட் அம்பாசிடராக பேசிக் கொண்டிருக்கும் நீங்கள், சனாதனத்தை எதிர்த்த அம்பேத்கரை புகழ்வது பொருத்தமாகவா இருக்கிறது! சனாதனம் போதித்த சாதியால் ஏற்பட்ட இழிவுகளை அகற்றத்தானே அம்பேத்கர் போராடினார். இனிப்பும் உப்பு எப்படி ஒரே சுவை தர முடியும்? சனாதனத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே பட்டியலின மக்களைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களே! உங்களின் டபுள் ரோல் நடிப்பு தமிழ்நாட்டில் எடுபடாது.

உத்தரப்பிரதேசத்தில் அதிக அளவில் பட்டியலினத்தவர் தாக்குதல்!

நாடு முழுவதும் பட்டியல் மற்றும் பழங்குடியினத்தவர் மீதான வன்கொடுமைகளில் 97.7 விழுக்காடு வழக்குகள் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட 13 மாநிலங்களில்தான் பதிவாகியிருக்கின்றன என ஒன்றிய அரசின் அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. 2024ஆம் ஆண்டில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினத்தவர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகள் குறித்த ஒன்றிய அரசு வெளியிட்ட அறிக்கையின் படி, நாடு முழுவதும் பட்டியலின மக்கள் மீதான தாக்குதல் குறித்து 51,656 வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில், 12,287 வழக்குகள் உத்தரப்பிரதேசத்தில் பதிவாகியிருக்கிறது. இது, மொத்தம் பதிவானவற்றில் 23.78 விழுக்காடு ஆகும்.

உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்த இடத்தில் ராஜஸ்தானில் 8,651 வழக்கு களும் மத்தியப்பிரதேசத்தில் 7,732 வழக்கு களும் பீகாரில் 1,799 வழக்குகளும் பதிவாகியுள்ளன. அதற்கு அடுத்த இடங்களில் ஒடிசாவில் 6.93 விழுக்காடும் மகாராஷ்டிராவில் 5.24 விழுக்காடும் வழக்குகள் பதிவு செய் யப்பட்டிருக்கிறது. இந்த 6 மாநிலங்களில் மட்டும் 81 விழுக்காடு வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த ஆறு மாநிலங்களிலும் பாஜக ஆட்சியில் உள்ளது. தமிழ்நாட்டில் 3 விழுக்காடு வழக்குகளே பதிவானது.

மாநில அரசுக்கு குடைச்சல் கொடுக்கிறார்!

நாட்டிலேயே பட்டியலின மக்களுக்கு அதிக அளவில் வன்முறைகளும் கொடுமைகளும் நடைபெறுவது பாஜக ஆளும் மாநிலங்களில்தான் என்பதை ஒன்றிய அரசின் தரவுகளே சொல்கின்றன. சாதிக் கொடுமைகளுக்கு அடிப்படையான மனுநீதியை உயர்த்திப் பிடிக்கும் சனாதனி ஆளுநர் ஆர்.என்.ரவி, சாதிக்கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் சமூகநீதி மாநிலத்தில் நீலிக் கண்ணீர் சிந்து கிறார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனநாயக முறையில் செயலாற்றி வரும் மாநில அரசுக்குக் குடைச்சலைக் கொடுக்கிறார். உச்ச நீதிமன்றம் ஓங்கிக் குட்டிய பிறகும் அந்த அவமானத்தைத் துடைக்க அவதூறுகளை அள்ளி வீசுகிறார். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவதைப் போல் பட்டியலின மக்கள் மீது கரிசனத்தைக் கொட்டுகிறார்.

உங்களை ஆளுநராக நியமித்த ஒன்றிய உள் துறை அமைச்சர் அமித்ஷா அம்பேத்கரை பற்றிச் சொன்னது உங்களுக்கு நினைவில் இருக்கிறதா ஆளுநரே! "இந்தக் காலத்தில் அம்பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர்... என அவரின் பெயரைக் கோஷமிடுவது பேஷனாகிவிட்டது. இத்தனை முறை அம்பேத்கர் பெயரைக் கூறியதற்குப் பகவானின் பெயரைக் கூறியிருந்தால் அவர்களுக்குச் சொர்க்கத்திலாவது இடம் கிடைத்திருக்கும்" என அமித்ஷா நாடாளுமன்றத்தில் சொன்ன போது நாடு முழுவதும் கொந்தளிப்பு எழுந்தது.

"அம்பேத்கர் தலித் தலைவர் அல்ல; அவர் பாரதத் தாயின் மகன்" என இன்றைக்குச் சொல்லும் ஆளுநர் அவர்களே.. அமித்ஷா சொன்ன போது ராஜ்பவனின் தர்பார் மண்டபத்தில் ஒரு கண்டன கூட்டத்தை ஏன் நடத்தவில்லை? அமித்ஷா சொல்வது போல உங்களுக்கும் அம்பேத்கர் பெயரைக் கோஷமிடுவது பேஷனாகிவிட்டதா?

ஆரியம் பேசும் நீங்கள் அம்பேத்கரை போற்றி பாடுகிறீர்கள். அம்பேத்கரை பற்றிப் பேசவோ திராவிடத்தைத் தூற்றவோ உங்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்ட

முரசொலி செய்தியாளர் பிலால் மறைவு!

மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் – கழகத்தினர் அஞ்சலி!

கோவை , ஏப். 16 -

கோவை மாவட்ட முரசொலி செய்தியாளராக பணிபுரிந்து வந்த பிலால் அவர்கள் (வயது 43) உடல் நலக் குறைவு காரணமாக நேற்று (15.04.2025-செவ்வாய்க்கிழமை) பிற்பகல் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.

இச்செய்தி அறிந்ததும் கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் உள்ளிட்ட கழகத்தினர் நேரில் சென்று மறைந்த பிலால் அவர்களின் உடல் மீது மலர் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

மறைந்த பிலால் அவர்களுக்கு மனைவி, மகன் , மகள் உள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் அன்னாரது இறுதி அடக்கம் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கலைஞரின் கனவு இல்ல பணி ஆணைகளை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 1,120 பயனாளிகளுக்கு ரூ.38.75 கோடி மதிப்பில் வழங்கினார், இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மேலாளர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.